# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No. 68 / 2020 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | **அ.சா. 3** |
| Name : | | **திரு.மயில்வாகனன்** |
| Father's/Husband Name: | | **திரு.கந்தன்** |
| Village : | | **கொளத்தூர்** |
| Taluk : | | **ஆலத்தூர்** |
| Age : | | 75 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.10.2023

**(1ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :–**

01. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் தான் இருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு என் வீட்டின் அருகே போலீசார் தகராறு நடந்த இடத்தில் படம் எடுத்ததற்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். ( **பார்வை மகஜரில் உள்ள அந்த முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும்**). போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

01. போலீசார் வரைபடம், மகஜர் தயார் செய்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். காவல் நிலையத்தில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை என் வீட்டின் அருகில் வாங்கினார்கள். ஆஜர் 1ம் எதிரியை தெரியுமா என்றால் தெரியும். அவர் என் சொந்த அண்ணன் மகன் என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் 1ம் எதிரிக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளதா

என்றால் இல்லை.

02. ஆஜர் 1ம் எதிரியின் மீது நான் கொடுத்த புகாரில் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். ஆஜர் 1ம் எதிரியின் முன்விரோதம் காரணமாக போலீசார் சம்பவயிடத்தில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரிக்கும் எனக்கு இருக்கும் முன்விரோதம் காரணமாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No. 68 / 2020 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா. 1 |
| Name : | | திருமதி.ஜானகி |
| Father's/Husband Name: | | திரு.கலியபெருமாள் |
| Village : | | கொளத்தூர் |
| Taluk : | | ஆலத்தூர் |
| Age : | | 43 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.10.2023

**(1ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்படுகிறது :–**

**1,3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை : –**

01. என்ன வேலை செய்கிறேன் என்றால் பஞ்சாயத்து அலுவலகத்தில் துப்புரவு பணியாளராக வேலை செய்கிறேன். மாதம் எவ்வளவு சம்பளம் என்றால் 4,600 ரூபாய். நான் வட்டிக்கு பணம் கொடுக்கிறேனா என்றால் இல்லை. நகையின் பேரில் பணம் கொடுப்பேனா என்றால் இல்லை. ஆஜர் 1ம் எதிரிக்கு 2 லட்சம் பணம், 4 பவுன் நகை கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த பணம் , நகை கொடுத்ததற்கு புரோ நோட்டு அல்லது ரசீது கொடுத்தேனா என்றால் 50,000 ரூபாய்க்கு அவர் டைரியில் எழுதி கையொப்பம் போட்டுள்ளார்.

02. எந்த விதமான ஆவணமும், ஆதாரமும் இல்லாமல் அவருக்கு இந்த பணம் , நகை கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எந்த விதமான ஆவணமும், ஆதாரமும் இல்லாமல் அவருக்கு இந்த பணம் , நகை கொடுத்ததற்கு என்ன அவசியம் என்றால் ஆஜர் 1ம் எதிரியின் மகன் திருமணத்திற்காக வற்புறுத்தி கேட்டதால் கழுத்தில் இருந்த 2 பவுன் நகையை கழற்றி கொடுத்தேன். ஆஜர் 1ம் எதிரி வீட்டிற்கும் என் வீட்டிற்கு

எவ்வளவு தூரம் என்றால் 100 மீட்டர் இருக்கும். நான் பால் வாங்குவதற்கு 1ம் எதிரியின் வீட்டின் வழியாக செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

03. அருள்செல்வி யார் என்றால் 1ம் எதிரியின் மகள். ஆதித்தியா யார் என்றால் அவர் பையன். அருள்செல்வி மருந்து குடித்துவிட்டு மருத்துவமனையில் இருந்தது தெரியுமா என்றால் தெரியும். அவர் மருந்து குடித்தற்கு என்ன காரணம் என்றால் தெரியாது. பால் வாங்குவதற்காக என் மகன் 1ம் எதிரியின் வீட்டின் வழியாக செல்லும் போது வசலில் அமர்ந்திருந்த அவரது மகளை பார்த்து என் மகன் கிண்டல் செய்து அத்துமீறி பேசி கையை பிடித்து இழுத்ததால் தான் அந்த பெண் மருத்துகுடித்தார் என்றால் சரியல்ல. அருள்செல்வி பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரா என்றால் இல்லை.

04. அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். என் மகன் மீது வழக்கு போட கூடாது என்று நான் கேட்டதால் அருள்செல்வி வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் மகன் சிவகுமாரை தெரியுமா என்றால் தெரியும். அவர் 1ம் எதிரியின் இளைய மகன். அவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு போட்ட பிறகு தான் சிவகுமார் இறந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு போட்ட மன உளைச்சலால் தான் சிவகுமார் இறந்தார் என்றால் இல்லை.

05. என் 1ம் எதிரியின் வீட்டிற்கு பணம் கேட்பதற்காக எத்தனை மணிக்கு சென்றார் என்றால் காலை 07.00 மணிக்கு. என் மகன் தனியாக சென்றாரா அல்லது யாரையாவது அழைத்து சென்றாரா என்றால் தனியாகதான் சென்றார். என் மகனை அடித்துவிட்டதாக யார் என்னிடம் சொன்னார் என்றால் கர்ணன், சுந்தர்ராஜன், மயில்வாகனன். கர்ணன், சுந்தர்ராஜன் என் பக்கத்து வீட்டுகாரரா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்தின் அருகில் குடியிருப்பவர்.

06. கர்ணன், சுந்தர்ராஜ் என் உறவினாரா என்றால் இல்லை. என் மகனை அடித்துவிட்டார்கள் என்று சொன்னவுடன் யார், யார் சென்றோம் என்றால் நான், என் அண்ணன், பக்கத்து வீட்டுக்காரர்கள் சென்றோம். அதுபோல் எதுவும் நடக்கவில்லை. நாங்கள் அங்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி எனக்கு பணத்தை திருப்பி கொடுக்காதற்கு புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

07. பூசாரி கர்ணன் வீடு என் வீடும் ஒரே இடத்தில் உள்ளதா என்றால் 20 வீடு தள்ளியுள்ளது. என் வீட்டில் இருந்து 1ம் எதிரியின் வீட்டை பார்த்தால் தெரியுமா

என்றால் மாரியம்மண் கோவில் இருந்து பார்த்தால் தெரியும். நான் 2 லட்சம் பணமும், நகையும் எதிரிக்கு கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

08. என் மகன் ஆதித்தியாவிற்கும் 1ம் எதிரி மகள் அருள்செல்விக்கும் நடந்த பிரச்சனையை மறைப்பதற்காக எதிரியின் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான புகாரை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2 லட்சம் பணமும், நகையும் எதிரிக்கு கொடுப்பதற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.